1993 ஏப்ரல் 16]

6. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தனிப் பாதுகாப்புப் படைப் பிரிவு சட்டமுன்வடிவு, 1993

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனிப் பாதுகாப்புப் படைப்பிரிவு சட்டமுன்வடிவு. இதனை பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனிப் பாதுகாப்புப் படைப் பிரிவு சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.